| English | Tamil |
|---|---|
| **Information for travellers returning to the ACT from Victoria** | **விக்டோரியாவிலிருந்து *ACT*-க்கு திரும்பும் பயணிகளுக்கான தகவல்** |
| **What can I do?** | ***நான் என்ன செய்ய முடியும்?*** |
| • ACT residents who have recently travelled to Victoria, are permitted to return to the ACT, including by car or plane but must quarantine for a period of 14 days from the day after leaving Victoria, under quarantine restrictions.<br>• Non ACT residents who have an exceptional need to travel to the ACT from Victoria, may be granted an exemption to enter the ACT. | • *சமீபத்தில் விக்டோரியாவுக்குச் சென்ற ACT குடியிருப்பாளர்கள், கார் அல்லது விமானம் உள்ளிட்டவற்றினூடாக, ACT-க்குத் திரும்ப அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் விக்டோரியாவை விட்டு வெளியேறிய நாளிலிருந்து, 14 நாட்களுக்கு, தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளின் கீழ் தம்மை தனிமைப்படுத்த வேண்டும்.*<br>• *ACT- ஐ வசிப்பிடமாகக் கொண்டிராதவர்கள், விசேட காரணத்திற்காக விக்டோரியாவிலிருந்து ACT-க்கு பயணிக்கவேண்டிய தேவை ஏற்பட்டால், ACT-க்குள் நுழைவதற்கு விதிவிலக்கு அளிக்கப்படலாம்.* |
| **What can't I do?** | ***நான் என்ன செய்ய முடியாது?*** |
| • Canberrans are strongly advised not to travel to Victoria at this time.<br>• Travel to any Melbourne 'hotspot' suburbs is particularly discouraged.<br>• From 12:01am 8 July 2020, non ACT residents are not permitted to travel into the ACT from Victoria, unless they hold an exemption to enter. This is a temporary measure and will be reassessed in line with the NSW border advice. | • *இந்த நேரத்தில் விக்டோரியாவுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று கன்பராவாசிகளுக்கு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறது.*<br>• *குறிப்பாக மெல்பேர்னில் அதிக தொற்றுள்ள இடங்களாக (hotspot) அடையாளம் காணப்பட்ட புறநகர்களுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.*<br>• *ACT- ஐ வசிப்பிடமாகக் கொண்டிராத எவரும், 2020 ஜூலை 8 அதிகாலை 12:01 மணி முதல், விக்டோரியாவிலிருந்து ACT-க்குள் பயணிக்கமுடியாது. உள்நுழைவதற்கான அனுமதி உள்ளவர்களுக்கு விதிவிலக்கு உண்டு. இது ஒரு தற்காலிக நடவடிக்கை என்பதுடன் NSW எல்லை ஆலோசனைக்கு ஏற்ப இது மீளாய்வு செய்யப்படும்.* |

| **What are my responsibilities?** | ***எனது பொறுப்புகள் எவை?*** |
|---|---|
| • All returning ACT residents must notify ACT Health of their intent to return to the ACT, and provide a range of details.<br>• From 12:01am 8 July 2020, all ACT residents returning from travel to Victoria are required to enter quarantine for a period of 14 days from the day after leaving Victoria.<br>• Anyone who has recently been in the Greater Melbourne metropolitan area who arrived in the ACT prior to the Public Health Direction, is strongly encouraged to be vigilant and monitor themselves for any symptoms. If you get any COVID-19 symptoms, no matter how mild, you should get tested.<br>• Anyone coming to the ACT from Victoria must closely monitor themselves for symptoms of COVID-19.<br>• Penalties and fines may apply to those who fail to comply with Public Health Directions. | • *திரும்பிவரும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும், ACT-க்குத் திரும்புவது குறித்த தமது தீர்மானத்தை ACT Health-க்கு அறிவிப்பதுடன் பல விவரங்களையும் வழங்க வேண்டும்.*<br>• *2020 ஜூலை 8 அதிகாலை 12:01 மணி முதல், விக்டோரியாவிலிருந்து திரும்பும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும், விக்டோரியாவை விட்டு வெளியேறிய நாளிலிருந்து 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.*<br>• *பொது சுகாதார அறிவுறுத்தல் வழங்கப்படுவதற்கு முன்னதாக, சமீபத்தில் Greater Melbourne metropolitan பகுதிக்கு சென்று ACT திரும்பியவர்கள், தமக்கு ஏதாவது அறிகுறிகள் ஏற்படுகின்றனவா என்பது தொடர்பில் விழிப்புடன் அவதானிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். உங்களுக்கு ஏதேனும் COVID-19 அறிகுறிகள் ஏற்பட்டால், அது எவ்வளவு இலேசானதாக இருந்தாலும், நீங்கள் சோதனை செய்து பார்க்க வேண்டும்.*<br>• *விக்டோரியாவிலிருந்து ACT க்கு வரும் எவரும் COVID-19 க்கான அறிகுறிகள் ஏற்படுகிறதா என தங்களை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும்.*<br>• *பொது சுகாதார அறிவுறுத்தல்களுக்கு இணங்க மறுப்பவர்களுக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்* |

| | |
|---|---|
| **Please note**: if you plan to quarantine at a private residence, it needs to allow for appropriate separation from other household members who are not in quarantine. Household members in quarantine would ideally have a separate bedroom, bathroom and should avoid spending time in communal spaces at the same time as other people in the home who are not in quarantine. If this can’t be done you will be required to quarantine in a hotel or other approved premises. ACT Health can assist in providing details of suitable accommodation which you can book (at your own expense). Please note that we will require evidence of a valid booking if you are using hotel accommodation for quarantine purposes. | ***தயவுசெய்து கவனிக்கவும்***: *நீங்கள் ஒரு தனியார் இல்லத்தில் தனிமைப்படுத்தலுக்குள்ளாகத் திட்டமிட்டால், தனிமைப்படுத்தலில் இல்லாத மற்ற வீட்டு உறுப்பினர்களிடமிருந்து விலகியிருப்பதற்கு ஏதுவான இடமாக இருக்க வேண்டும்.*<br>*தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீட்டு உறுப்பினர்கள், தனி படுக்கையறை, குளியலறை ஆகியவற்றைக் கொண்டிருப்பர். மேலும் வீட்டிலுள்ள பொதுவான இடங்களில், தனிமைப்படுத்தலில் இல்லாத மற்றவர்கள் இருக்கும் நேரங்களில், அங்கிருப்பதைத் தவிர்க்க வேண்டும்.*<br>*இதைச் செய்ய முடியாதபட்சத்தில் நீங்கள் ஒரு ஹோட்டல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற வளாகங்களில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். நீங்கள் முன்பதிவு செய்யக்கூடிய (உங்கள் சொந்த செலவில்) பொருத்தமான தங்குமிட விவரங்களை வழங்குவதில் ACT Health உதவும். தனிமைப்படுத்தப்படும் நோக்கங்களுக்காக நீங்கள் ஹோட்டலைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், முன்பதிவு செய்யப்பட்டதற்கான சரியான சான்றுகள் எங்களுக்குத் தேவைப்படும் என்பதை நினைவில் கொள்க.* |
| **What are the community responsibilities?** | ***சமூக பொறுப்புகள் எவை?*** |
| • Maintain personal hygiene, including regular hand washing.<br>• Stay home if unwell.<br>• Avoid travelling to Victoria at this time for anything other than absolutely essential reasons.<br>• Get tested if you have COVID-19 symptoms. | • *தவறாமல் கை கழுவுதல் உள்ளிட்ட தனிப்பட்ட சுகாதாரத்தை பேணவும்.*<br>• *உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் வீட்டிலேயே இருங்கள்.*<br>• *அத்தியாவசிய காரணங்களைத் தவிர வேறு எதற்காகவும் இந்த நேரத்தில் விக்டோரியாவுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.*<br>• *உங்களுக்கு COVID-19 அறிகுறிகள் ஏற்பட்டால் சோதிக்கவும்.* |

| | |
|---|---|
| **What does the public need to know?** | ***பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?*** |
| • Continue to practise good hand and respiratory hygiene, physical distancing, stay home if you are unwell and get tested if you have symptoms of COVID-19.<br>• You should also download the COVIDSafe app and ensure you provide your first name and contact number to any businesses that are required to ask for contact tracing purposes. | • *சரியானமுறையில் கை மற்றும் சுவாசம் தொடர்பிலான சுகாதாரம் பேணுவதைத் தொடருங்கள், சமூக இடைவெளி, உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் வீட்டிலேயே இருங்கள், உங்களுக்கு COVID-19 அறிகுறிகள் இருந்தால் சோதனை செய்யுங்கள்.*<br>• *நீங்கள் COVIDSafe செயலியைத் தரவிறக்கம் செய்வதுடன், தொடர்பு கண்டுபிடிக்கும்(contact tracing) நோக்கங்களுக்காக உங்கள் முதல் பெயர் மற்றும் தொடர்பு எண்ணைக் கோரவேண்டிய கடப்பாடுள்ள வணிகங்களுக்கு, அவற்றை வழங்க வேண்டும்.* |
| **Can I travel to Victoria?** | ***நான் விக்டோரியாவுக்கு பயணிக்கலாமா?*** |
| Canberrans are being strongly advised not to travel to Victoria at this time. Canberrans that choose to travel to Victoria will be required to undertake quarantine for a period of 14 days on their return. | *இந்த நேரத்தில் விக்டோரியாவுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று கன்பராவாசிகளுக்கு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறது. விக்டோரியாவுக்கு பயணம் செய்யத் தீர்மானிக்கும் கன்பராவாசிகள் அங்கிருந்து திரும்பி வரும்போது 14 நாட்களுக்கு தம்மை தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்க வேண்டும்.* |
| **How long will these measures be in place?** | ***இந்த நடவடிக்கைகள் எவ்வளவு காலம் நடைமுறையில் இருக்கும்?*** |
| This is a temporary measure and will be reassessed in line with the NSW border advice. | *இது ஒரு தற்காலிக நடவடிக்கை என்பதுடன் NSW எல்லை ஆலோசனைக்கு ஏற்ப இது மீளாய்வு செய்யப்படும்.* |
| **Can I quarantine at home?** | ***நான் வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகலாமா?*** |
| If you live in the ACT, you are encouraged to quarantine at home. More information is provided on the Quarantine page. | *நீங்கள் ACT-இல் வசிப்பவர் என்றால், வீட்டிலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு ஊக்குவிக்கப்படுகிறீர்கள். தனிமைப்படுத்தப்படல் தொடர்பிலான பக்கத்தில் கூடுதல் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.* |

| | |
|---|---|
| **Please note**: if you plan to quarantine at a private residence, it needs to allow for appropriate separation from other household members who are not in quarantine. Household members in quarantine would ideally have a separate bedroom, bathroom and should avoid spending time in communal spaces at the same time as other people in the home who are not in quarantine. If this can’t be done you will be required to quarantine in a hotel or other approved premises. ACT Health can assist in providing details of suitable accommodation which you can book (at your own expense). Please note that we will require evidence of a valid booking if you are using hotel accommodation for quarantine purposes. | **தயவுசெய்து கவனிக்கவும்**: நீங்கள் ஒரு தனியார் இல்லத்தில் தனிமைப்படுத்தலுக்குள்ளாகத் திட்டமிட்டால், தனிமைப்படுத்தலில் இல்லாத மற்ற வீட்டு உறுப்பினர்களிடமிருந்து விலகியிருப்பதற்கு ஏதுவான இடமாக இருக்க வேண்டும். தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீட்டு உறுப்பினர்கள், தனி படுக்கையறை, குளியலறை ஆகியவற்றைக் கொண்டிருப்பர். மேலும் வீட்டிலுள்ள பொதுவான இடங்களில், தனிமைப்படுத்தலில் இல்லாத மற்றவர்கள் இருக்கும் நேரங்களில், அங்கிருப்பதைத் தவிர்க்க வேண்டும். இதைச் செய்ய முடியாதபட்சத்தில் நீங்கள் ஒரு ஹோட்டல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிற வளாகங்களில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். நீங்கள் முன்பதிவு செய்யக்கூடிய (உங்கள் சொந்த செலவில்) பொருத்தமான தங்குமிட விவரங்களை வழங்குவதில் ACT Health உதவும். தனிமைப்படுத்தப்படும் நோக்கங்களுக்காக நீங்கள் ஹோட்டலைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், முன்பதிவு செய்யப்பட்டதற்கான சரியான சான்றுகள் எங்களுக்குத் தேவைப்படும் என்பதை நினைவில் கொள்க. |
| **Where can I get more information about quarantine?** | **தனிமைப்படுத்தப்படல் குறித்த கூடுதல் தகவல்களை நான் எங்கே பெற முடியும்?** |
| If you need more information about quarantining at home, please visit our Quarantine page. You can also contact ACT Health via the COVID-19 Helpline on (02) 6207 7244. | வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுவது பற்றி உங்களுக்கு கூடுதல் தகவல் தேவைப்பட்டால், தயவுசெய்து எமது தனிமைப்படுத்தப்படல் பக்கத்தைப் பார்வையிடவும். (02) 6207 7244 என்ற எண்ணில் COVID-19 ஹெல்ப்லைன் வழியாக ACT Health-ஐயும் தொடர்பு கொள்ளலாம். |

| | |
|---|---|
| **I'm an ACT resident returning from Victoria - do I need a permit to cross the ACT border?** | ***நான் விக்டோரியாவிலிருந்து திரும்பும் ஒரு ACT குடியிருப்பாளர் - ACT எல்லையை கடக்க எனக்கு அனுமதி தேவையா?*** |
| You do not require a permit to enter the ACT, however all returning ACT residents must notify ACT Health of their intent to return to the ACT and provide the following details to COVID.Exemptions@act.gov.au: | *ACT க்குள் நுழைய உங்களுக்கு அனுமதி தேவையில்லை, இருப்பினும் திரும்பிவரும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும் ACT-க்குத் திரும்புவது குறித்த தமது தீர்மானத்தை ACT Health-க்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் பின்வரும் விவரங்களை COVID.Exemptions@act.gov.au க்கு வழங்க வேண்டும்:* |
| 1. Name<br>2. Date of birth<br>3. Home address<br>4. Phone number<br>5. Email address<br>6. Travel details (flight number, by car etc)<br>7. Date of entry to ACT<br>8. Date you were last in Victoria<br>9. Details of address of where you plan to quarantine in the ACT. | *1. பெயர்<br>2. பிறந்த தேதி<br>3. வீட்டு முகவரி<br>4. தொலைபேசி எண்<br>5. மின்னஞ்சல் முகவரி<br>6. பயண விவரங்கள் (விமான இலக்கம், கார் மூலம் எனில் அது குறித்த விவரம் போன்றவை)<br>7. ACT-க்குள் நுழையும் தேதி<br>8. நீங்கள் கடைசியாக விக்டோரியாவில் இருந்த தேதி<br>9. நீங்கள் ACT-இல் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக திட்டமிட்டுள்ள இடத்தின் முகவரி விவரங்கள்.* |
| If you are travelling by road, you will also be required to seek a permit from the NSW Government to transit through NSW and would be required to transit through NSW by the most practicable direct route. Permits can be obtained online from: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit | *நீங்கள் சாலை வழியாக பயணிக்கிறீர்களென்றால் NSW வழியாக பயணம் செய்வதற்கான அனுமதியை NSW அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டும். அத்துடன் அதிகம் பயன்பாட்டிலுள்ள நேரடி பாதை வழியாகவே பயணம் செய்ய வேண்டும். இதற்கான அனுமதியை இணையமூடாகப் பெறலாம்: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit* |

| | |
|---|---|
| **How will people who fly into Canberra from Melbourne be checked?** | ***மெல்பேர்னில் இருந்து கன்பராவுக்கு விமானம் மூலம் வரும் நபர்கள் எவ்வாறு சோதிக்கப்படுவார்கள்?*** |
| Currently, all passengers on flights arriving from Melbourne into Canberra airport have their identification checked and are provided with advice on quarantine, if applicable. | *தற்போது, மெல்பேர்னில் இருந்து கன்பரா விமான நிலையத்திற்கு வரும் அனைத்து பயணிகளினதும் அடையாளம் சரிபார்க்கப்பட்டு, பொருத்தமானவிடத்து தனிமைப்படுத்தல் குறித்த ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.* |
| **How long do I have to stay in quarantine for?** | ***நான் எவ்வளவு காலம் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்?*** |
| If you are returning to the ACT from Victoria, you will need to self-quarantine until 14 days have passed after leaving Victoria. | *நீங்கள் விக்டோரியாவிலிருந்து ACT-க்குத் திரும்புகிறீர்கள் என்றால், விக்டோரியாவை விட்டு வெளியேறி 14 நாட்கள் முடியும் வரை நீங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.* |
| **What proof do I need to show that I am an ACT resident at the border?** | ***எல்லையில், நான் ஒரு ACT குடியிருப்பாளர் என்பதை உறுதிப்படுத்த எனக்கு என்ன ஆதாரம் தேவை?*** |
| Identification including proof of residence in the ACT. | *ACT-இல் வசிப்பவர் என்பதற்கான ஆதாரம் உட்பட அடையாளத்தை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள்* |
| Details of a valid booking if you are using hotel accommodation for quarantine purposes. | *தனிமைப்படுத்தப்படல் நோக்கங்களுக்காக நீங்கள் ஹோட்டல் ஒன்றைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால் அதுகுறித்த உண்மையான முன்பதிவு விவரங்கள்.* |

| | |
|---|---|
| **I have a permit to cross the NSW border – will this be accepted at the ACT border, or do I need to apply for an ACT permit?** | ***NSW எல்லையை கடக்க எனக்கு அனுமதி உள்ளது - இது ACT எல்லையில் ஏற்றுக்கொள்ளப்படுமா, அல்லது நான் ACT அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டுமா?*** |
| ACT residents do not need to apply for a permit to enter the ACT. You do need to notify ACT Health of your intention to return to the ACT from Victoria so that we can support you through the mandatory 14 day quarantine period. | *ACT குடியிருப்பாளர்கள் ACT-க்குள் நுழைய அனுமதி பெற விண்ணப்பிக்க தேவையில்லை. விக்டோரியாவிலிருந்து ACT-க்குத் திரும்புவதற்கான உங்கள் விருப்பத்தை ACT Health-க்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும், இதன்மூலம் கட்டாய 14 நாள் தனிமைப்படுத்தல் காலத்தில் நாம் உங்களுக்கு உதவ முடியும்.* |
| Non-ACT residents travelling from Victoria can only enter the ACT if they have an exemption from ACT Health. | *விக்டோரியாவிலிருந்து பயணிக்கும், ACT- ஐ வசிப்பிடமாகக் கொண்டிராதவர்கள், ACT Health-இலிருந்து விதிவிலக்கு அனுமதி பெற்றிருந்தால் மட்டுமே ACT-க்குள் நுழைய முடியும்.* |
| **I'm planning to travel to the ACT from Melbourne - will I be able to get through the NSW border?** | ***நான் மெல்பேர்னில் இருந்து ACT-க்கு பயணிக்க திட்டமிட்டுள்ளேன் - நான் NSW எல்லை வழியாக வர முடியுமா?*** |
| **Y**ou will be required to seek a permit from the NSW Government to transit through NSW. Permits can be obtained online from: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit | *NSW வழியாக பயணம் செய்வதற்கான அனுமதியை நீங்கள் NSW அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டும். இதற்கான அனுமதியை இணையமூடாகப் பெறலாம்: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit* |

| | |
|---|---|
| **My car is registered to my old Melbourne address, but I now live in Canberra.  If I travel to NSW, will I be allowed to cross the border to return to my ACT address?** | ***எனது கார் எனது பழைய மெல்பேர்ன் முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் நான் இப்போது கன்பராவில் வசிக்கிறேன். நான் NSW-க்குப் பயணம் செய்தால், எனது ACT முகவரிக்குத் திரும்பிவரும்போது, எல்லையைத் தாண்ட அனுமதிக்கப்படுவேனா?*** |
| You should be able to cross the border as you transit through NSW on your way to the ACT, but please ensure you have a form of identification which provides proof of residence in the ACT. | *ACT-க்கு திரும்பிவரும் போது நீங்கள் NSW வழியாக எல்லையை கடக்க முடியும். ஆனால் தயவுசெய்து நீங்கள் ACT-இல் வசிப்பவர் என்பதற்கான சான்றினை வழங்கும் அடையாள ஆவணம் ஒன்று உங்களிடம் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.* |
| You will need to apply for a permit from Service NSW.  Permits can be obtained online from: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit | *Service NSW-இடமிருந்து நீங்கள் அனுமதியொன்றைப் பெற விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான அனுமதியை இணையமூடாகப் பெறலாம்: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit* |
| **My licence shows my old Melbourne address, but I now live in Canberra.  If I travel to NSW, will I be allowed to cross the border to return to my ACT address?** | ***எனது ஓட்டுநர் உரிமத்தில் எனது பழைய மெல்பேர்ன் முகவரி இருக்கிறது. ஆனால் நான் இப்போது கன்பராவில் வசிக்கிறேன். நான் NSW-க்குப் பயணம் செய்தால், எனது ACT முகவரிக்குத் திரும்பிவரும்போது, எல்லையைத் தாண்ட அனுமதிக்கப்படுவேனா?*** |
| You should be able to cross the border as you transit through NSW on your way to the ACT, but you should ensure that you have an alternative form of proof of your ACT residence with you as you travel. | *ACT-க்கு திரும்பிவரும்போது நீங்கள் NSW வழியாக எல்லையை கடக்க முடியும். ஆனால் பயணம் செய்யும்போது, தயவுசெய்து நீங்கள் ACT-இல் வசிப்பவர் என்பதற்கான சான்றினை வழங்கும் வேறொரு அடையாள ஆவணம் உங்களிடம் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.* |

| | |
|---|---|
| However, if you have been in Victoria in the last 14 days you will need to apply for a permit from Service NSW.  Permits can be obtained online from: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit | *இருப்பினும், கடந்த 14 நாட்களில் நீங்கள் விக்டோரியாவில் இருந்திருந்தால், Service NSW-இன் அனுமதிக்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான அனுமதியை இணையமூடாகப் பெறலாம்: https://www.service.nsw.gov.au/transaction/apply-covid-19-nsw-border-entry-permit* |
| **I am returning from a visit to Victoria, but did not visit any hotspots - am I required to quarantine in the ACT for 14 days?** | ***நான் விக்டோரியாவுக்குச் சென்றுவிட்டு திரும்பி வருகிறேன், ஆனால் நான் தொற்று அதிகம் உள்ள(hotspots) எந்த இடத்திற்கும் செல்லவில்லை - நான் 14 நாட்களுக்கு ACT-இல் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டுமா?*** |
| Yes. | *ஆம்.* |
| From 12:01am 8 July 2020, ACT residents returning from Victoria will need to quarantine at home for 14 days. | *2020 ஜூலை 8 அதிகாலை 12:01 மணி முதல், விக்டோரியாவிலிருந்து திரும்பும் அனைத்து ACT குடியிருப்பாளர்களும், 14 நாட்களுக்கு வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.* |
| **I normally reside in Victoria, but have been staying in NSW – can I visit Canberra?** | ***நான் வழக்கமாக விக்டோரியாவில் வசிக்கிறேன், ஆனால் NSW-இல் தங்கியிருக்கிறேன் - நான் கன்பராவுக்கு வரலாமா?*** |
| You can only travel into the ACT from NSW if you have **not** visited Victoria in the previous 14 days or have been granted an exemption from ACT Health. | *கடந்த 14 நாட்களில் நீங்கள் விக்டோரியாவுக்குச்* **செல்லவில்லை** *எனில், அல்லது ACT Health-இலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தால் மட்டுமே நீங்கள் NSW இலிருந்து ACT-க்கு பயணிக்க முடியும்.* |

| | |
|---|---|
| **How do I get an exemption to enter the ACT?** | ***ACT-க்குள் நுழைய நான் எவ்வாறு விதிவிலக்கு பெறுவது?*** |
| If you have an exceptional need to travel to the ACT, you will need to apply for an exemption at least 48 hours (wherever possible) before your intended travel date. | *ACT-க்கு பயணிப்பதற்கான விசேட தேவை உங்களுக்கு இருந்தால், நீங்கள் பயணிக்க விரும்பும் தேதிக்கு ஆகக்குறைந்தது 48 மணிநேரத்திற்கு முன்னதாக (முடிந்தவரை) விதிவிலக்கு கோரி விண்ணப்பிக்க வேண்டும்.* |
| **What can I do if I require an urgent exemption to visit the ACT within a matter of hours?** | ***ACT-க்கு பயணம் செய்வதற்கான விதிவிலக்கு அனுமதியை சில மணிநேரங்களுக்குள் அவசரமாக பெறவேண்டியிருந்தால் நான் என்ன செய்யலாம்?*** |
| You should contact the COVID-19 Hotline in the first instance. However, please note that the Exemptions team within the ACT are receiving a high volume of enquiries at present. | *நீங்கள் முதலில் COVID-19 உதவி இலக்கத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், விதிவிலக்கு அனுமதியை வழங்கும் ACT-இலுள்ள குழு தற்போது அதிகளவானோரின் கேள்விகளை எதிர்கொள்கின்றனர் என்பதை நினைவில் கொள்க.* |